தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 11.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.NC 902/F/2024 (SA 15536/F/2023)

திரு.இரா.கி.சந்திரசேகர் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
உதவி மேலாளர் (நிர்வாகம் & சட்டம்),
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிட்.,
பதிவு அலுவலகம், புறவழிச்சாலை,
மதுரை-625010. .. பொது அதிகார அமைப்பு

ஆணை-II

இவ்வழக்கின் மீதான விசாரணை 07.10.2026 அன்று, நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.N.மாரிமுத்து, உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்., விருதுநகர் மண்டலம் அவர்கள் 11.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு கடித எண். விருது/பொதஅ/NC-902-F-2024/2026, நாள் 30.10.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாகவும், மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.P.ரவிச்சந்திரன், உதவி மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், விருதுநகர் மண்டலம் அவர்களின் எழுத்துமூல விளக்கம் ஆகியவற்றை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போதைய பொதுத்ததகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து கீழ்காணும் உத்தரவினை இவ்வாணையம் பிறப்பிக்கிறது.

- **"இவ்வாணையத்தின் 08.11.2024 நாளிட்ட உத்தரவினை நிறைவேற்றாத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.P.ரவிச்சந்திரன், உதவி மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், விருதுநகர் மண்டலம் அவர்களுக்கு சட்டப்பிரிவு 20(1)ன் கீழ் அபராதமாக ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) விதித்து இவ்வாணையம் ஆணையிடுகிறது. அதனை அரசு கணக்குத்தலைப்பில் செலுத்தி அதற்கான ஆதாரத்தினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் 02.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது."**

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்
(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC 902/F/2024 (SA 15536/F/2023)</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு:-</u>
பொதுத்தகவல் அலுவலர்,
உதவி மேலாளர் (நிர்வாகம் & சட்டம்),
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிட்.,
பதிவு அலுவலகம், புறவழிச்சாலை,
மதுரை-625010.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
உதவி மேலாளர் (நிர்வாகம் & சட்டம்),
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிட்.,
பதிவு அலுவலகம், புறவழிச்சாலை,
மதுரை-625010.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

<u>மனுதாரர்:-</u>

திரு.இரா.கி.சந்திரசேகர்,
எண்.74, சண்முக ஆசிரியர் தெரு,
இடையன் குலம் (கி),
மம்சாபுரம் (அ),
திருவில்லிபுத்தூர் (வ), விருதுநகர்-626110.

Copy to file: KR/PA